

# சேலம் மாநகராட்சி

## நிதி நிலை அறிக்கை

## 2013 - 2014

தனிக்குடிநீர்த் திட்டம் நிலை –2 ன் கீழ் கோட்டம் எண் 57 மற்றும் 35 பகுதியில் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல்





# சேலம் மாநகராட்சி

## 2013 - 2014
## நிதி நிலை அறிக்கை



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
## டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்



## திரு. கே.பி. முனுசாமி

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**



திரு. எடப்பாடி. கே. பழனிசாமி

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்



**திரு. எஸ். சவுண்டப்பன்**

**வணக்கத்திற்குரிய மேயர்**



**திரு. எம். நடேசன்**

**வணக்கத்திற்குரிய துணை மேயர்**

## வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாளில் மனு பெறுதல்





# வணக்கத்திற்குரிய மேயர்

# திரு. எஸ். சவுண்டப்பன்

# அவர்களின்

# 2013- 2014 ஆம் ஆண்டிற்கான

# சேலம் மாநகராட்சி

# நிதி நிலை அறிக்கை மீதான உரை

வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை. – குறள்

வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களைப் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்.

அன்னை சந்தியா ஈன்றெடுத்த அருந்தவப்புதல்வியானாய்,
ஆளுகின்ற திறமை கண்டு அனைவராலும் போற்றப்பட்டாய்,
இன்னலுறும் பெண்களுக்கு பெண் காவல்நிலையம் நீ தந்தாய்,
ஈர்க்கின்ற உனது திட்டம் விலையில்லா அரிசி தந்தாய்,
உன்னைத்தான் பாராட்டி உச்சி முகர்ந்தாள் அன்னை தெரசாவும்,
ஊருக்கு உழைக்கத்தான் இந்த பாருக்குள் நீ பிறந்தாய்,
எல்லோரும் போற்றும் வண்ணம் நல்லாட்சி நடத்துகின்றாய்,
ஏழைகள் ஏற்றம்பெறும் உனதாட்சி நடக்குதம்மா,
ஐயம் என்பது உன் வாழ்வில் எப்போதும் இல்லையம்மா,
ஒன்றுபட்ட இந்தியாவில் உனது பெயர் உயருதம்மா,
ஓடத்தில் போகின்ற கடல்வாழ் மீனவரை காப்பாற்றத் துடிக்கின்றாய்,
ஔவை மட்டும் இருந்திருந்தால் அம்மாவை அகமகிழ்ந்து பாடியிருப்பாள்.

– கவிதை

இத்தனை சிறப்பு வாய்ந்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** டாக்டர் **புரட்சித்தலைவி அம்மா** அவர்களை வணங்கி மகிழ்கிறேன்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் நல்லாசியோடு, சேலம் மாநகர மக்களுக்கு சேவை செய்வதற்கு வாய்ப்பளித்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொற்பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

**1866**ல் சேலம் நகராட்சி மன்றம் தோற்றுவித்து, **1966**ல் நூற்றாண்டு விழா எடுத்து, **1994**ல் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு இன்று **2013**ல் **148**வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் **2013–2014**ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய எனக்கு வாய்ப்பளித்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கும், மேலும் இந்த நிதிநிலை அறிக்கைக்கான மாமன்ற கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அத்துனை நல்ல உள்ளங்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**“ வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர குடி உயரும்**
**குடி உயர கோனுயரும் ”**

– அவ்வையார்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு காரணமானவர்கள் உழவர்கள். விவசாயம் சிறந்து விளங்கினால்தான் ஒரு நாடு சிறப்படையும். அதனால் தான் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் உழவர் பெருமக்களுக்கு உயிராகத் திகழ்கிறார்.

இதனை மனதில் கொண்டு தான் காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச்செய்து, டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்து, தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்து தமிழகத்திற்கு உயிராக திகழ்கிறார் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

சேலம் மாநகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக நிலுவையில் உள்ள ஆனந்தாபாலம் மற்றும் குண்டுபோடும்பாலம் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.2.27 கோடி நிதியினை ஒதுக்கிதந்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தை வளம் மிகுந்த மாநிலமாக்க தொலை நோக்கு திட்டம் 2023–ஐ சுட்டிக்காட்டியிருப்பது,

தமிழ்நாடு சட்டப் பேரவையின் வைர விழாவினை சிறப்பாக நடத்தி தமிழகத்திற்கு பெருமை சேர்த்தது,

இளைஞர் காவல் படை என்னும் புதிய அமைப்பை ஏற்படுத்தி 50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வழிவகை செய்தது,

வழக்கறிஞர்களுக்கான சேம நல நிதியினை ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ. 5.25 இலட்சமாக உயர்த்தி அறிவித்துள்ளது,

அனைவராலும் பாராட்டும் வகையில் கல்விக்காக ரூ.15,000 கோடி நிதி ஒதுக்கி கல்வித் துறையில் புரட்சியை ஏற்படுத்தி சாதனை படைத்தது,

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் 13 வகை கலவை சாதம் – மசாலா முட்டைகள் போன்ற உணவு வகைகளை சேர்த்து வழங்க உத்தரவிட்டது,

தனது சொந்தப் பணத்தை செலவு செய்து முல்லை பெரியாறு அணையை கட்டி தமிழக தென் மாவட்டங்களுக்கு நீராதாரத்தை பெருக்கிய பொறியாளர் பென்னி குவிக்கிற்கு சிலை வைத்தது,

திருச்சி கல்லணையை கட்டிய கரிகால் சோழனுக்கு மணி மண்டபம் கட்டுவதற்கான அறிவிப்பு செய்துள்ளது,

இயல், இசை, நாடகம் போன்ற கலைகளில் சிறந்து விளங்கிய கலை மேதைகளுக்கு பாராட்டு தெரிவித்தது,

தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு எண்ணற்ற நிவாரண உதவிகளை வழங்க உத்தரவிட்டுள்ளது,

மேலும் இதுபோன்று தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை வாரி வழங்கிய **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக நெஞ்சார்ந்த நன்றியினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கல்வி சிறந்த தமிழ்நாடு,**
**புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு,**
**வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து,**
**வான் புகழ் கொண்ட தமிழ்நாடு,**
**விலையில்லா மடிக்கணினி தந்து,**
**மாணவர்களின் கல்வியை வளர்க்கும்,**
**மாண்புமிகு அம்மா ஆளும் தமிழ்நாடு.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆசியோடு சேலம் மாநகராட்சி மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவும், வளர்ந்து வரும் மாநகரத்தின் முன்னேற்றத்தை கவனத்தில் கொண்டும், மத்திய மாநில அரசுகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் மாநகராட்சியின் சொந்த நிதி ஆதாரம் ஆகியவற்றைக் கொண்டும் **2012–2013**ஆம் நிதியாண்டின் திருத்திய நிதி நிலை அறிக்கை மற்றும் **2013–2014**ஆம் நிதியாண்டின் நிதி நிலை அறிக்கை ஆகியவற்றை மிக சிறப்பு வாய்ந்த இந்த மாமன்றத்தில் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

# சேலம் மாநகராட்சி
# 2012-2013 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## வருவாய் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சொத்து வரி | **2665.40** | 1. | மொத்த நிர்வாகச் செலவு | **6639.00** |
| 2. | தொழில் வரி | **549.50** | 2. | பொது பணிகள் | **3250.00** |
| 3. | கேளிக்கை வரி | **264.00** | 3. | குடிநீர் பராமரிப்பு | **2050.00** |
| 4. | முத்திரைத்தாள் கட்டணம் | **725.80** | 4. | தெருவிளக்கு பராமரிப்பு | **493.60** |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | **696.80** | 5. | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | **703.60** |
| 6. | குடிநீர் விநியோக வரவு | **2050.00** | 6. | கல்வி | **250.50** |
| 7. | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | **280.00** | 7. | நூலக வரி | **230.00** |
| 8. | கட்டணங்கள் மூலம் வரவு | **260.00** | 8. | வாகனங்கள் பராமரிப்பு | **330.00** |
| 9. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | **6217.90** | 9. | கட்டிடங்கள் பராமரிப்பு | **180.00** |
| 10. | பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை | **375.00** | 10. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **200.00** |
| 11. | இதர வரவுகள் | **557.25** | 11. | இதர செலவுகள் | **314.95** |
| | **மொத்த வரவினம்** | **14641.65** | | **மொத்த செலவினம்** | **14641.65** |

# சேலம் மாநகராட்சி
# 2012-2013 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## மூலதனக் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சட்டமன்ற உறுப்பினர் மானியம் | **38.95** | 1. | சட்டமன்ற உறுப்பினர் மானியம் | **38.95** |
| 2. | பகுதி II திட்டம் | **50.00** | 2. | பகுதி II திட்டம் | **50.00** |
| 3. | திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை 2 | **235.00** | 3. | திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை 2 | **233.56** |
| 4. | பாதாள சாக்கடை திட்டம் | **3500.00** | 4. | பாதாள சாக்கடை திட்டம் | **2888.00** |
| 5. | தனிக்குடிநீர் திட்டம் | **3111.00** | 5. | தனிக்குடிநீர் திட்டம் | **2325.00** |
| 6. | இயக்கம் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி (குடிநீர் பணிகளுக்கு) | **260.00** | 6. | இயக்கம் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி (குடிநீர் பணிகளுக்கு) | **260.00** |
| 7. | ஐ.எச்.எஸ்.டி.பி. | **214.52** | 7. | ஐ.எச்.எஸ்.டி.பி. | **214.52** |
| 8. | 13 வது நிதிக்குழு மானியம் | **1268.24** | 8. | 13 வது நிதிக்குழு மானியம் | **1268.24** |
| 9. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | **87.50** | 9. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | **87.50** |
| 10. | மாற்றுத் திறனாளிகளுக்கு கழிப்பிடம் கட்டுதல் | **36.30** | 10. | மாற்றுத் திறனாளிகளுக்கு கழிப்பிடம் கட்டுதல் | **36.30** |
| 11. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | **294.00** | 11. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | **294.00** |
| 12. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | **1276.75** | 12. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | **1276.75** |
| 13. | பிளாஸ்ட்டிக் சாலை | **83.18** | 13. | பிளாஸ்ட்டிக் சாலை | **83.18** |
| 14. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **203.80** | 14. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **203.80** |
| 15. | மீன் மார்கெட் | **45.00** | 15. | மீன் மார்கெட் | **45.00** |
| 16. | திறந்தவெளிக் கழிப்பிடம் ஒழிக்கும் திட்டம் | **64.15** | 16. | திறந்தவெளிக் கழிப்பிடம் ஒழிக்கும் திட்டம் | **64.15** |
| 17. | நிலம் கையகபடுத்தல் (ஆனந்தாபாலம்) | **415.00** | 17. | நிலம் கையகபடுத்தல் (ஆனந்தாபாலம்) | **415.00** |
| 18. | ஆனந்தாபாலம் அணுகு சாலை | **196.00** | 18. | ஆனந்தாபாலம் அணுகு சாலை | **196.00** |
| 19. | உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி | **261.56** | 19. | உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி | **261.56** |
| 20. | இயக்கம் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி (திட்டப்பணிகளுக்கு) | **307.50** | 20. | இயக்கம் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி (திட்டப்பணிகளுக்கு) | **307.50** |
| 21. | வைப்புத் தொகை | **153.85** | 21. | வைப்புத் தொகை | **149.35** |
| 22. | முன்பணம் | **140.70** | 22. | முன்பணம் | **127.10** |
| | | | 23. | தெருவிளக்கு | **181.62** |
| | | | 24. | கடன் திருப்பிச் செலுத்துதல் | **1235.92** |
| | **மொத்தம்** | **12243.00** | | **மொத்தம்** | **12243.00** |
| | **ஆக மொத்த வரவினம்** | **26884.65** | | **ஆக மொத்த செலவினம்** | **26884.65** |

# சேலம் மாநகராட்சி
# 2013-2014 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
# வருவாய் கணக்கு


| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சொத்து வரி | **2850.00** | 1. | மொத்த நிர்வாகச் செலவு | **7250.00** |
| 2. | தொழில் வரி | **605.00** | 2. | பொது பணிகள் | **3700.00** |
| 3. | கேளிக்கை வரி | **300.00** | 3. | குடிநீர் பராமரிப்பு | **2550.00** |
| 4. | முத்திரைத்தாள் கட்டணம் | **750.00** | 4. | தெருவிளக்கு பராமரிப்பு | **1043.00** |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | **996.00** | 5. | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | **953.00** |
| 6. | குடிநீர் விநியோக வரவு | **2500.00** | 6. | கல்வி | **900.00** |
| 7. | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | **315.00** | 7. | நூலக வரி | **300.00** |
| 8. | கட்டணங்கள் மூலம் வரவு | **286.00** | 8. | வாகனங்கள் பராமரிப்பு | **450.00** |
| 9. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | **7450.00** | 9. | கட்டிடங்கள் பராமரிப்பு | **300.00** |
| 10. | பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை | **1200.00** | 10. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **200.00** |
| 11. | இதர வரவுகள் | **626.00** | 11. | இதர செலவுகள் | **562.00** |
| | **மொத்த வரவினம்** | **17878.00** | | **மொத்த செலவினம்** | **18208.00** |

# சேலம் மாநகராட்சி

## 2013-2014

## வருவாய் கணக்கு வரவுகள்

## REVENUE RECEIPTS





| வ.எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சொத்து வரி | 2850.00 |
| 2. | தொழில் வரி | 605.00 |
| 3. | கேளிக்கை வரி | 300.00 |
| 4. | முத்திரைத்தாள் கட்டணம் | 750.00 |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | 996.00 |
| 6. | குடிநீர் விநியோக வரவு | 2500.00 |
| 7. | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | 315.00 |
| 8. | கட்டணங்கள் மூலம் வரவு | 286.00 |
| 9. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | 7450.00 |
| 10. | பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை | 1200.00 |
| 11. | இதர வரவுகள் | 626.00 |
| | மொத்த வரவினம் | 17878.00 |

# சேலம் மாநகராட்சி

## 2013-2014

## வருவாய் கணக்கு செலவுகள்

## REVENUE EXPENDITURE




| வ.எண் | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மொத்த நிர்வாகச் செலவு | 7250.00 |
| 2. | பொது பணிகள் | 3700.00 |
| 3. | குடிநீர் பராமரிப்பு | 2550.00 |
| 4. | தெருவிளக்கு பராமரிப்பு | 1043.00 |
| 5. | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | 953.00 |
| 6. | கல்வி | 900.00 |
| 7. | நூலக வரி | 300.00 |
| 8. | வாகனங்கள் பராமரிப்பு | 450.00 |
| 9. | கட்டிடங்கள் பராமரிப்பு | 300.00 |
| 10. | இயற்கை பேரிடர் மேலாண்மை | 200.00 |
| 11. | இதர செலவுகள் | 562.00 |
| | மொத்த செலவினம் | 18208.00 |

# சேலம் மாநகராட்சி
# 2013-2014 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## மூலதனக் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | 100.00 | 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | 100.00 |
| 2. | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 50.00 | 2. | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 50.00 |
| 3. | திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை 2 | 594.00 | 3. | திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை 2 | 594.00 |
| 4. | பாதாள சாக்கடை திட்டம் | 8822.00 | 4. | பாதாள சாக்கடை திட்டம் | 7300.00 |
| 5. | தனிக்குடிநீர் திட்டம் | 15754.00 | 5. | தனிக்குடிநீர் திட்டம் | 15754.00 |
| 6. | ஐ.எச்.எஸ்.டி.பி. | 316.48 | 6. | ஐ.எச்.எஸ்.டி.பி. | 316.48 |
| 7. | 13 வது நிதிக்குழு மானியம் | 866.68 | 7. | 13 வது நிதிக்குழு மானியம் | 866.68 |
| 8. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | 1004.00 | 8. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | 1004.00 |
| 9. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | 1503.95 | 9. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | 1503.95 |
| 10. | பிளாஸ்ட்டிக் சாலை | 83.00 | 10. | பிளாஸ்ட்டிக் சாலை | 83.00 |
| 11. | இயற்கை பேரிடர் மேலாண்மை | 200.00 | 11. | இயற்கை பேரிடர் மேலாண்மை | 200.00 |
| 12. | மீன் மார்கெட் | 55.00 | 12. | மீன் மார்கெட் | 55.00 |
| 13. | திறந்த வெளி கழிப்பிடம் ஒழிக்கும் திட்டம் | 182.30 | 13. | திறந்த வெளி கழிப்பிடம் ஒழிக்கும் திட்டம் | 182.30 |
| 14. | இயக்கம் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி | 3359.50 | 14. | இயக்கம் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி | 3359.50 |
| 15. | நவீன இறைச்சி கூடம் | 100.00 | 15. | நவீன இறைச்சி கூடம் | 100.00 |
| 16. | எரிவாயு தகனமேடை | 300.00 | 16. | எரிவாயு தகனமேடை | 300.00 |
| 17. | நகர் ஊரமைப்பு நிதி | 3898.50 | 17 | நகர் ஊரமைப்பு நிதி | 3898.50 |
| 18. | மின்சார சேமிப்பு & LED விளக்குகள் அமைத்தல் | 1900.00 | 18. | மின்சார சேமிப்பு & LED விளக்குகள் அமைத்தல் | 1900.00 |
| 19. | வைப்புத் தொகை | 170.00 | 19. | வைப்புத் தொகை | 160.00 |
| 20. | முன்பணம் | 150.00 | 20. | முன்பணம் | 142.50 |
| | | | 21. | தெருவிளக்கு | 200.00 |
| | | | 22. | கடன் திருப்பிச் செலுத்துதல் | 1500.00 |
| | **மொத்தம்** | **39409.41** | | **மொத்தம்** | **39569.91** |
| | **ஆக மொத்த வரவினம்** | **57287.41** | | **ஆக மொத்த செலவினம்** | **57777.91** |


**பற்றாக்குறை - 490.50**

# சேலம் மாநகராட்சி

## 2013-2014

## மூலதனக் கணக்கு வரவுகள்

## CAPITAL RECEIPTS





| வ.எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | 100.00 |
| 2. | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 50.00 |
| 3. | திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை-2 | 594.00 |
| 4. | பாதாள சாக்கடை திட்டம் | 8822.00 |
| 5. | தனிக்குடிநீர் திட்டம் | 15754.00 |
| 6. | ஐ.எச்.எஸ்.டி.பி. | 316.48 |
| 7. | 13 வது நிதிக்குழு மானியம் | 866.68 |
| 8. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | 1004.00 |
| 9. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | 1503.95 |
| 10. | பிளாஸ்ட்டிக் சாலை | 83.00 |
| 11. | இயற்கை பேரிடர் மேலாண்மை | 200.00 |
| 12. | மீன் மார்கெட் | 55.00 |
| 13. | திறந்தவெளி கழிப்பிடம் ஒழிக்கும் திட்டம் | 182.30 |
| 14. | இயக்கம் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி | 3359.50 |
| 15. | நவீன இறைச்சிக்கூடம் | 100.00 |
| 16. | எரிவாயு தகனமேடை | 300.00 |
| 17. | நகர் ஊரமைப்பு நிதி | 3898.50 |
| 18. | மின்சாரம் சேமிப்பு & எல்.இ.டி. விளக்குகள் அமைத்தல் | 1900.00 |
| 19. | வைப்புத் தொகை | 170.00 |
| 20. | முன்பணம் | 150.00 |
| | மொத்தம் | 39409.41 |
| | ஆக மொத்த வரவினம் | 57287.41 |

# சேலம் மாநகராட்சி

**2013-2014**

## மூலதனக் கணக்கு செலவுகள்

**CAPITAL EXPENDITURE**




| வ.எண் | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | 100.00 |
| 2. | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 50.00 |
| 3. | திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை -2 | 594.00 |
| 4. | பாதாள சாக்கடை திட்டம் | 7300.00 |
| 5. | தனிக்குடிநீர் திட்டம் | 15754.00 |
| 6. | ஐ.எச்.எஸ்.டி.பி. | 316.48 |
| 7. | 13 வது நிதிக்குழு மானியம் | 866.68 |
| 8. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | 1004.00 |
| 9. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | 1503.95 |
| 10. | பிளாஸ்டிக் சாலை | 83.00 |
| 11. | இயற்கை பேரிடர் மேலாண்மை | 200.00 |
| 12. | மீன் மார்கெட் | 55.00 |
| 13. | திறந்தவெளி கழிப்பிடம் ஒழிக்கும் திட்டம் | 182.30 |
| 14. | இயக்கம் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி | 3359.50 |
| 15. | நவீன இறைச்சிக்கூடம் | 100.00 |
| 16. | எரிவாயு தகனமேடை | 300.00 |
| 17. | நகர் ஊரமைப்பு நிதி | 3898.50 |
| 18. | மின்சாரம் சேமிப்பு & எல்.இ.டி. விளக்குகள் அமைத்தல் | 1900.00 |
| 19. | வைப்புத் தொகை | 160.00 |
| 20. | முன்பணம் | 142.50 |
| 21. | தெருவிளக்கு | 200.00 |
| 22. | கடன் திருப்பிச் செலுத்துதல் | 1500.00 |
| | மொத்தம் | 39569.91 |
| | ஆக மொத்த செலவினம் | 57777.91 |

**பற்றாக்குறை - 490.50**

# சேலம் மாநகராட்சி
# 2012-2013 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## கல்வி நிதி

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | கல்வி வரி | **406.45** | 1. | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் | **422.35** |
| 2. | முதலீடுகள் செய்த தொகை | **565.00** | 2. | முதலீடுகள் செய்த தொகை | **565.00** |
| 3. | முதலீடுகள் மீதான வட்டி மற்றும் வங்கிகள் மூலம் வட்டி | **28.20** | 3. | பள்ளி வாடகை | **2.30** |
| 4. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **33.12** | 4. | 10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு | **0.70** |
| | | | 5. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **33.12** |
| | | | 6. | 5 வது ஊதியக்குழு நிலுவை | **7.50** |
| | | | 7. | இதர இனங்கள் | **1.80** |
| | **மொத்தம்** | **1032.77** | | **மொத்தம்** | **1032.77** |

# சேலம் மாநகராட்சி
# 2013-2014 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## கல்வி நிதி

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | கல்வி வரி | **425.50** | 1. | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் | **952.66** |
| 2. | முதலீடுகள் செய்த தொகை | **565.00** | 2. | பள்ளி வாடகை | **3.00** |
| 3. | முதலீடுகள் மீதான வட்டி மற்றும் வங்கிகள் மூலம் வட்டி | **45.00** | 3. | 10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு | **1.50** |
| 4. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **33.12** | 4. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **99.36** |
| | | | 5. | 5 வது ஊதியக்குழு நிலுவை | **10.00** |
| | | | 6. | இதர இனங்கள் | **2.10** |
| | **மொத்தம்** | **1068.62** | | **மொத்தம்** | **1068.62** |

## சேலம் மாநகராட்சி

## 2012 – 2013 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள்

### வருவாய் கணக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 14641.65 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 14641.65 | இலட்சங்கள் |

### மூலதனக் கணக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 12243.00 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 12243.00 | இலட்சங்கள் |
| ஆக மொத்த வரவு | ரூ. 26884.65 | இலட்சங்கள் |
| ஆக மொத்த செலவு | ரூ. 26884.65 | இலட்சங்கள் |

2012 – 2013 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பற்றாக்குறையான தொகை ரூ.540.45 இலட்சங்களை மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு நிதியுதவிகள் மூலமாக சரி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சேலம் மாநகராட்சி

## 2013 – 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட விவரங்கள்

### வருவாய் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. | 17878.00 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. | 18208.00 | இலட்சங்கள் |

### மூலதனக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. | 39409.41 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. | 39569.91 | இலட்சங்கள் |
| **ஆக மொத்த வரவு** | **ரூ.** | **57287.41** | **இலட்சங்கள்** |
| **ஆக மொத்த செலவு** | **ரூ.** | **57777.91** | **இலட்சங்கள்** |
| **பற்றாக்குறை** | **ரூ.** | **490.50** | **இலட்சங்கள்** |

இந்த நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையை சேலம் மாநகராட்சியின் வருவாயை மேம்பாடு செய்தும், நிதி ஆதாரங்களை கூடுதலாகப் பெற்றும், சிக்கன நடவடிக்கை மூலமும் சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# வருவாய் கணக்கு

## வரியினங்கள் (Taxes)

### சொத்துவரி

| | | |
|---|---|---|
| மொத்த வரிவிதிப்புகள் எண்ணிக்கை | – | 1,79,209 |
| பிப்ரவரி 2013 முடிய வரி வசூல் | – | ரூ. 1779.44 இலட்சங்கள் |
| 2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | – | ரூ. 2665.40 இலட்சங்கள் |
| 2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வரி வசூல் | – | ரூ. 2850.00 இலட்சங்கள் |

வருகின்ற நிதி ஆண்டில் நிலுவையில் உள்ள மாநகராட்சி சொத்துவரி உள்ளிட்ட பிற வரிகள் மற்றும் வரியில்லா இனங்கள் முழுவதும் மாநகராட்சி அலுவலர்களின் துணையோடு வசூல் செய்யப்படும். நிலுவையிலுள்ள சொத்துவரி வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வரவும், அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களிலிருந்து மாநகராட்சிக்கு வரவேண்டிய நிலுவை சொத்துவரித் தொகைகளை வசூலிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாநகராட்சியின் நிதி ஆதாரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

### தொழில்வரி

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 2013 முடிய வரி வசூல் | – | ரூ. 396.14 இலட்சங்கள் |
| 2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | – | ரூ. 549.50 இலட்சங்கள் |
| 2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வரி வசூல் | – | ரூ. 605.00 இலட்சங்கள் |

### குடிநீர் கட்டணம்

| | | |
|---|---|---|
| மொத்த குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை | – | 89,768 |
| பிப்ரவரி 2013 முடிய வசூல் (வழித்தட கிராம குடிநீர் கட்டணம் உட்பட) | – | ரூ.1498.94 இலட்சங்கள் |
| 2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – | ரூ. 2050.00 இலட்சங்கள் |
| 2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வரவு | – | ரூ. 2500.00 இலட்சங்கள் |

## வரியில்லாயினங்கள் (Non-Taxes)

### கேளிக்கை வரி

2012–2013ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு - ரூ.264.00 இலட்சங்கள்

2013–2014 ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வரவு- ரூ.300.00 இலட்சங்கள்

### முத்திரைத்தாள் கட்டணம்

2012–2013ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு- ரூ. 725.80 இலட்சங்கள்

2013–2014 ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வரவு- ரூ.750.00 இலட்சங்கள்

### சொத்துகள் மூலம் வரவு

குத்தகை இனங்கள் (ஆண்டு உரிமையாணை இனங்கள்)

2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் - ரூ.416.80 இலட்சங்கள்

2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் - ரூ.646.00 இலட்சங்கள்

### மாநகராட்சி கடைகள்

2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் - ரூ.280.00 இலட்சங்கள்

2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் - ரூ.350.00 இலட்சங்கள்

### கட்டணங்கள் மூலம் வருவாய்

2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் - ரூ.260.00 இலட்சங்கள்

2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் - ரூ.286.00 இலட்சங்கள்

### அரசு நிதியுதவி மற்றும் மான்யம்

2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் - ரூ. 6217.90 இலட்சங்கள்

2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் - ரூ. 7450.00 இலட்சங்கள்

### இதர வருவாய்

2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் - ரூ.557.25 இலட்சங்கள்

2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் - ரூ.626.00 இலட்சங்கள்

# பொறியியல் பிரிவு

# சிறப்புத் திட்டங்கள்

## தனிக்குடிநீர் திட்டம் நிலை – 1

சேலம் மாநகராட்சிக்கு (மேட்டூரில் இருந்து சேலத்திற்கு) தனிக்குடிநீர் திட்டம் அரசாணை எண். 258 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை மூலம் ரூ. 320.00 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதில் முதல்கட்டமாக 5 சிப்பங்கள் ரூ. 172.12 கோடி மதிப்பீட்டில் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் பொறுப்பேற்ற பின் சேலம் மாநகரத்தின் தலையாய பிரச்சனையான குடிநீர் பிரச்சனையினை தீர்க்கும் வகையில் பணிகளை முடுக்கி விட்டு இத்திட்டத்திற்கான பணிகள் யாவும் மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறது. தற்சமயம் 92 சதவீத பணிகள் முடிவு பெற்றுள்ளது. இதுவரை மேற்படி திட்டத்திற்காக ரூ.158.62 கோடி செலவிடப்பட்டுள்ளது. அனைத்து பணிகளையும் 30.06.2013க்குள் முடித்திட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தனிக்குடிநீர் திட்டம் நிலை – 2

சேலம் மாநகர பகுதியில் ஏற்கனவே 1952 மற்றும் 1985 ஆம் ஆண்டில் போடப்பட்ட குடிநீர் விநியோக குழாய்களில் பழுதடைந்த குழாய்களை மாற்றுதல் மற்றும் தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்றப்படி பிரதானக் குழாய்களை வடிவமைப்பில் மாற்றம் செய்தல் ஆகியவற்றிற்காக 212கி.மீ. நீளத்திற்கு விநியோகக் குழாய்களை மாற்றி அமைத்தல், மாநகரில் 22 மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டுதல் மற்றும் 65 கி.மீ. நீளத்திற்கு பிரதானக் குழாய்கள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு மொத்தம் ரூ.132.12 கோடிக்கு அனுமதி பெறப்பட்டு பணிகளை நிறைவேற்ற 03.2.2012ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை 25.06.2012–ம் தேதியில் வழங்கப்பட்டது. பணி துவங்கப்பட்டு 10 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட பணிகள் அனைத்தும் 31.01.2014ல் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்,
தலைமையில் மாநகராட்சி பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் வழங்குதல்
தொடர்பான ஆய்வுக்கூட்டம்



மேலும் இத்திட்டத்தினால் சேலம் மாநகர அனைத்து பகுதிகளுக்கும் சீரான அழுத்தத்துடன் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

## பாதாள சாக்கடைத் திட்டம்

சேலம் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆணை எண்.60(டி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (ந.நி.3) துறை நாள் 23.2.2006ல் ரூ.149.39 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு பணிகளை முடுக்கிவிடப்பட்டு மொத்தம் அமைக்கப்பட வேண்டிய 421.00 கி.மீ. நீளமுள்ள குழாய்களில் நாளது தேதி வரை 153.00 கி.மீ நீளத்திற்கு கழிவு நீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி குழாய்கள் மூலம் பெறப்படும் கழிவு நீரை நவீன முறையில் சுத்திகரித்திட வெள்ளக்குட்டை, வண்டிபேட்டை, மான்குட்டை மற்றும் அணைமேடு ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டு வரும் நவீன சுத்திகரிப்பு நிலையப்பணிகள் 70 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.62.94 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை டிசம்பர் 2013க்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதாள சாக்கடைத் திட்ட கழிவு நீர் குழாய் பதிக்க வெட்டப்படும் சாலையினை போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறின்றி சாலை பராமரிப்பு பணி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனந்தா பாலம் மற்றும் குண்டுபோடும் பாலம் அணுகு சாலைகள் அமைக்க நிலம் வழங்கியவர்களுக்கு
மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்
நிலக்கிரையத் தொகை வழங்குதல்






மாநகரப் பகுதியில் விடுபட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை திட்ட வசதியினை பொதுமக்களுக்கு வழங்கிட இரண்டாம் கட்ட பணிக்கான விரிவான திட்ட அறிக்கையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## திருமணிமுத்தாறு அபிவிருத்தித்திட்டம் நிலை – 2

சேலம் மாநகராட்சியின் திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை–2ன் கீழ் ரூ.31.50 கோடி மதிப்பீட்டில் திருமணிமுத்தாறு அபிவிருத்திப்பணி, வெள்ளக்குட்டை ஓடை அபிவிருத்திப்பணி மற்றும் மூன்று இடங்களில் பாலங்கள் அமைத்திடவும் அரசு ஆணை எண்.85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் மொத்தம் 9 பணிகள் எடுக்கப்பட்டு இதுவரை 4 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 5 பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை 81 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு மேற்படி திட்டத்திற்கு ரூ.25.56 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதம் உள்ள பணிகளையும் 2013க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் நகரின் மையப்பகுதியில் ஆக்ஸ்போர்டு–ஆனந்தாபாலம் மற்றும் குண்டுபோடும் தெருபாலம் பணிகள் முடிவடைந்து, அதனுடைய அணுகு சாலை பணி இன்னும் நிறைவு பெறாமல் உள்ளதால்,மேற்கண்ட பணிக்கு தேவையான நிலங்களை தனியாரிடம் இருந்து கையகப்படுத்துவதற்காக, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு **மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி** அவர்களின் சீரிய முயற்சியால் துரித நடவடிக்கை மேற்கொண்டு 12 தனியார் நில உரிமையாளர்களிடம், பேச்சுவார்த்தை மூலம் 11,049 சதுரடி நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடங்களை

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கோட்டம் எண் 2 ஜாகீர் சின்னஅம்மாபாளையத்தில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு சமுதாயக்கூடத்தை ஆய்வு செய்தல்




ரூ.4.08 கோடி மதிப்பில் கையகப்படுத்தப்படவும், மேலும் தாங்குசுவர் மற்றும் அணுகு சாலை விரிவாக்க பணிகள் ரூ.1.96 கோடி மதிப்பீட்டிலும், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள். 29.1.2013ல் வெளியிட்டு நிதியினை முழு மான்யமாக வாரி வழங்கியுள்ளார்கள். இந்த பணியை மூன்று மாதத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் (IHSDP)

சேலம் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலும் 113 அங்கீகரிக்கப்பட்ட குடிசைப் பகுதிகள் உள்ளன. சேலம் மாநகரை குடிசைகளே இல்லாத மாநகரமாக உருவாக்கும் பொருட்டு மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன் குடிசைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தனிக்குடியிருப்புகள் கட்டுதல், அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது 1006 பயனாளிகளுக்குத் தனிக்குடியிருப்புகள் கட்ட பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்தில் நாளது தேதி வரை மத்திய மற்றும் மாநில அரசு மானியமாக தொகை ரூ. 1105.35 இலட்சங்கள் பெறப்பட்டுள்ளது. மேற்படி நிதியில் தனிக் குடியிருப்புகள் கட்டுதலில் வெவ்வேறு நிலைகளில் நாளது தேதிவரை ரூ.816.15 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. மேலும் அடிப்படை வசதி பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் 20 எண்ணிக்கைகளில் எடுத்துக்கொள்ளப்பட்டு 18 பணிகளுக்கு ரூ.196.15 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இதுவரை ஆக மொத்தம் ரூ.1012.30 இலட்சங்கள் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 2 பணிகளும் விரைவாக நடைபெற்று வருகிறது. ஏப்ரல் 2013க்குள் அனைத்து பணிகளும் முடிவடையும்.

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், கோட்டம் எண் 3 ல் குரங்குச்சாவடி சந்திப்பில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் உயர்கோபுர மின் விளக்கு துவக்கி வைத்தல்





வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு
திட்டத்தில் சாலைப்பணிகளை துவக்கி வைத்தல்



## தெரு விளக்கு

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் மொத்தம் 28,558 தெருவிளக்குகள் கீழ்கண்டுள்ளவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | குழல் விளக்குகள் | – 19,193 எண்ணிக்கைகள் |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் | – 8,004 எண்ணிக்கைகள் |
| 3. | மெர்குரி விளக்குகள் | – 259 எண்ணிக்கைகள் |
| 4. | டி 5 விளக்குகள் | – 941 எண்ணிக்கைகள் |
| 5. | சோலார் விளக்குகள் | – 95 எண்ணிக்கைகள் |
| 6. | உயர் கோபுர மின் விளக்குகள் | – 12 எண்ணிக்கைகள் |
| 7. | இதர வகை விளக்குகள் | – 54 எண்ணிக்கைகள் |
| | **ஆக மொத்தம்** | **– 28,558 எண்ணிக்கைகள்** |

மேலும் முக்கிய சாலைகள் மற்றும் அத்தியாவசிய இடங்களில் தேவையின் அடிப்படையில் தெருவிளக்குகள் கூடுதலாக அமைத்திட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசு ஆணை நிலை எண்.88 நாள் 24.09.2012ல் சேலம் மாநகராட்சியில் உள்ள குழல் விளக்குகளை மின் சேமிப்பு எல்.இ.டி. விளக்குகளாக மாற்ற உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் 2012–2013ல் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்காக 22.03.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## சாலைகள்

சேலம் மாநகராட்சி 91.34 ச.கி.மீ. கொண்ட பரப்பளவில் தார்சாலைகள், ஜல்லி சாலைகள், சிமெண்ட் சாலைகள் மற்றும் மண் சாலைகள் 748.13 கி.மீ. நீளத்திற்கு கீழ்க்கண்ட விவரப்படி மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. சிமெண்ட் சாலைகள் | – | 55.28 | கி.மீ |
| 2. தார்சாலைகள் | – | 649.26 | கி.மீ |
| 3. ஜல்லி சாலைகள் | – | 15.19 | கி.மீ |
| 4. மண் சாலைகள் | – | 28.40 | கி.மீ |
| **மொத்தம்** | **–** | **748.13** | **கி.மீ** |

### 1. தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட நான்கு வார்டு அலுவலக பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை சீரமைத்து மறுதார்தளம் அமைக்க தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2011–2012 ன் கீழ் மதிப்பீடு ரூ. 1180.00 இலட்சங்கள் மான்யமாக அரசிடமிருந்து பெறப்பட்டு ரூ. 1276.75 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் 63 பணிகள் 33.024 கி.மீ நீளத்திற்கு எடுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2012–2013ன் கீழ் ரூ. 1487.50 இலட்சம் அரசின் மான்யமாக ஒதுக்கீடு செய்ததில் 72 பணிகள் 26.535 கி.மீ நீளத்திற்கு ரூ. 1503.95 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2. ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி மேம்பாட்டு திட்டம் (IUDM)

ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி மேம்பாட்டு திட்டம் 2011–2012 ன் கீழ் மதிப்பீடு ரூ. 222.00 இலட்சம் அரசிடமிருந்து மான்யமாக பெறப்பட்டு ரூ. 294.00 இலட்சம் மதிப்பீட்டில் மரவனேரி பண்டு ரோடு சாலை சீரமைக்கும் பணி, திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்காக 2 காம்பாக்டர்

புதியதாக வாங்கப்பட்ட இரண்டு ஜே.சி.பி. வாகனங்கள் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் மாநகராட்சி பயன்பாட்டிற்கு வழங்குதல்








திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக வாங்கப்பட்ட குப்பைத்தொட்டி தள்ளுவண்டிகளை
வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாநகராட்சி பயன்பாட்டிற்கு வழங்குதல்



மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. கே.பி.முனுசாமி அவர்கள் மற்றும்
மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்
திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் மெய்யனூர் இடுகாட்டில்
தனியார் பங்களிப்பில் நவீன தகனமேடை அமைக்கும் பணி துவக்கி வைத்தல்



வாகனங்கள், 50 தள்ளுவண்டிகள், 100 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காம்பாக்டர் பின்கள் வாங்குதல் மற்றும் மேட்டூர் அணை இன்டேக் டவரில் உள்ள பழைய மோட்டார்கள், பம்புகள் மற்றும் டிரான்ஸ்பார்மர்கள் மாற்றியமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி மேம்பாட்டு திட்டம் 2012–2013ன் கீழ் ரூ.1000.40 இலட்சம் மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் 40 எண்ணிக்கையில் 13.462 கி.மீ. நீளத்திற்கு ரூ.373.49 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 10 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 30 பணிகள் நடைபெற்று வருகிறது.

### 3. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

2012–2013 ஆம் ஆண்டில் ரூ. 540.40 இலட்சம் மதிப்பீட்டில் ஜே.சி.பி. வாகனங்கள் –2, காம்பாக்டர் வாகனம் –6, டிப்பர் வாகனம்– 2, மினி டிப்பர் வாகனம்– 8, டம்பர் பிளேசர் வாகனம்--6, டம்பர் பிளேசர்பின்கள் –115, காம்பாக்டர் பின்கள்–200 வாங்கும் பணிகளுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டு. அவற்றில் ஜே.சி.பி. வாகனம் – 2 வாங்கப்பட்டுள்ளது மற்றும் மீதம் உள்ள 22 இனங்கள் விரைவில் வாங்கப்பட உள்ளது.

### 4. தனியார் பங்களிப்பு

சேலம் மாநகராட்சி பகுதியில் தனியார் பங்களிப்பில் சூரமங்கலம் வார்டு அலுவலகம் மெய்யனூர் இடுகாட்டில் ரூ.324.00 இலட்சம் மதிப்பீட்டில் மின்மயானம் அமைக்க சேலம் ரோட்டரி சங்கத்தினருக்கு உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற் கொள்ளப்பட உள்ளது.

## 5. உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்கம் & பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

சேலம் மாநகராட்சிக்கு 2012–2013ஆம் நிதியாண்டில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்கம் & பாராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து ரூ.1138.15 இலட்சம் அரசு மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டுள்ள பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

1. சேலம் மாநகராட்சிக்கு புதியதாக நவீன முறையில் மைய அலுவலக கட்டிடம் கட்ட மதிப்பீடு ரூ.7.00 கோடிக்கு அனுமதிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

2. சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.28ல் செவ்வாய்பேட்டை இடுகாட்டில் புதியதாக எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3. சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலக பகுதியில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ. 40.00 இலட்சத்தில் 32 புதிய ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

4. சேலம் மாநகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலையை ஒழிக்கும் திட்டம் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் புதியதாக 2 கழிப்பிடம் கட்டவும், ஏற்கனவே உள்ள 10 கழிப்பிடங்களை பழுது பணிகள் மேற்கொள்ளவும், மொத்த மதிப்பீடு தொகை ரூ.44.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கோட்டம் எண் 46 குகை மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில், கல்விநிதியின் கீழ் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடம் திறந்து வைத்தல்





5. சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.46ல் குகை கறிமார்கெட்டில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் இறைச்சி கூடம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

6. இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் 2011–2012ம் ஆண்டு குடிநீர் பணிக்காக ரூ.2 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் 3 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு கருமலைக்கூடல் மற்றும் நங்கவள்ளி நீருந்து நிலையத்தில் ஏற்கனவே பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள டிரான்ஸ்பார்மர், வி.சி.பி. பேனல் போர்டு, மோட்டார் பம்புசெட், கேபிள்ஸ் மற்றும் ஸ்டாட்டர் புதியதாக மாற்றி அமைக்கும் பணி மற்றும் நங்கவள்ளி நீர்வடிகட்டும் நிலையத்தில் உள்ள படிமங்களை மாற்றி அமைக்கும் பணி, கருமலை கூடல் நீருந்து நிலையத்தில் 6 இலட்சம் கொள்ளளவு கொண்ட சமநிலை நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 6. கல்வி நிதி

1. சேலம் மாநகராட்சி பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளிகளுக்கு 2012–2013ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ.415.15 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் எடுத்துக் கொள்ளப்பட்ட 20 பணிகளில் 4 பணிகள் முடிக்கப்பட்டது. 7 பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள 9 பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெறப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. சேலம் மாநகராட்சி பகுதியில் 2012–2013ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் அங்கன்வாடி மையங்களில் சிறு பழுது மற்றும் பெரிய அளவில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய 69 பணிகள் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## 7. குழந்தைகளுக்கான கழிப்பிடம் கட்டுதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் சிறப்பு திட்டத்தில் குழந்தைகளுக்கான கழிப்பிடம் கட்டும் திட்டத்திற்கு அரசு மான்யமாக ரூ.33.12 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்துள்ள தொகையுடன், மாநகராட்சி பங்களிப்பாக ரூ.66.24 இலட்சங்கள் சேர்த்து மொத்தம் ரூ.99.36 இலட்சங்கள் மதிப்பீட்டில் 184 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. அவற்றில் 96 பணிகள் முடிக்கப்பட்டு 88 பணிகள் நாளது தேதியில் நடைபெற்று வருகிறது.

## 8. நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட நிதி

சேலம் மாநகராட்சி பகுதியில் நகர் ஊரமைப்பு துறை நிதி உதவியுடன் விஜயராகவன் நகர் மற்றும் ஜெயா நகர் ஆகிய இரண்டு பகுதிகளில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைத்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது. சேலம் மாநகராட்சி புதிய பேருந்து நிலைய பகுதியில் ஓமலூர் சாலையில் நகர் ஊரமைப்பு துறை நிதி உதவியுடன் ரூ.105.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதசாரிகள் கடக்க சுரங்க நடைபாதை (Sub Way) அமைக்கப்பட உள்ளது.

2013–2014ம் நிதியாண்டில் நகர் ஊரமைப்பு துறை நிதி உதவியுடன் மாநகரில் 5 பூங்காக்கள் ரூ.140.00 இலட்சம் மதிப்பீட்டிலும் நடைபாதைப் பணிகள் 17 எண்ணிக்கையில் ரூ.1690.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ள உரிய முன்மொழிவுகள் ஆணையாளர், நகர் ஊரமைப்பு துறை சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கோட்டம் 1ல் நவீன மீன்மார்க்கெட் பணியினை துவக்கி வைத்தல்



## 9. நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.19ல் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய மீன்வளர்ச்சி கழகம் ஹைதராபாத் அமைப்பின் மூலம் 90 சதவீத மான்யத்துடன் புதிய நவீன மீன் விற்பனை நிலையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 10.தன்னிறைவு திட்டம்

சேலம் மாநகராட்சி நான்கு மண்டலங்களுக்கு சம்பந்தப்பட்ட பகுதிகளில் தன்னிறைவு திட்டத்தின் கீழ் தெரு விளக்கு, சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு ரூ.116.72 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 13 பணிகள் எடுத்துக் கொண்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

## 11. பொது நிதி

1. சேலம் மாநகராட்சி எல்லை பகுதியில் அனைத்து சாலைகளிலும் பொது மக்கள் பயன் பெறும் வகையில் சாலை வழிகாட்டி தகவல் பலகை அமைக்க முடிவெடுக்கப்பட்டு அதில் முதல் கட்டமாக ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் 126 எண்ணிக்கையிலான சாலை வழிகாட்டி தகவல் பலகை அமைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

மேலும் இரண்டாம் கட்டமாக ரூ.284.00 இலட்சம் மதிப்பீட்டில் 1180 எண்ணிக்கையிலான சாலை வழிகாட்டி தகவல் பலகை அமைக்க அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

2. சேலம் மாநகராட்சி பகுதியில் 2012–2013 ம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.3372.12 இலட்சம் மதிப்பீட்டில் 149 சாலை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சேலம் மாநகராட்சியில் பணிபுரியும்
பணியாளர்களுக்கு பதவி உயர்வுக்கான உத்திரவு வழங்குதல்



3. சேலம் மாநகராட்சி பகுதியில் 2012–2013ம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.1888.58 இலட்சம் மதிப்பீட்டில் 77 வடிகால் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

4. சேலம் மாநகராட்சி பகுதியில் 2012–2013ம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ 235.80 இலட்சம் மதிப்பீட்டில் 61 குடிநீர் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

5. சேலம் மாநகராட்சி பகுதியில் 2012–2013ம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு மின் மோட்டார் மூலம் நீரேற்றும் வகையில் 8 எண்ணிக்கையில் ஜெனரேட்டர் அமைக்கும் பணிகளுக்கு ரூ.71.85 இலட்சம் மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கப்பட்டு, 6 ஜெனரேட்டர்கள் பெறப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 2 ஜெனரேட்டர்கள் பெறப்பட உள்ளது.

## பொதுப்பிரிவு

சேலம் மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களின் பணிமூப்பு, கல்வி மற்றும் தகுதிகளின் அடிப்படையில் காலிப் பணியிடத்திற்கு, பணிநியமனகுழு தீர்மானங்களின் அடிப்படையில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, 2012–2013ஆம் நிதியாண்டில் பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவி | பதவி உயர்வு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உதவியாளர் | கண்காணிப்பாளர் | 1 |
| 2 | இளநிலை உதவியாளர் | உதவியாளர் | 2 |
| 3 | செயல் திறன் உதவியாளர் நிலை II | செயல்திறன் உதவியாளர் நிலை 1 | 9 |
| 4 | செயல் திறனற்ற பணியாளர் | ஓட்டுநர் | 1 |
| 5 | அடிப்படை பணியாளர் | பதிவுரு எழுத்தர் | 7 |

கோட்டம் எண் 14ல் புதியதாக கட்டப்பட்டுள்ள மகப்பேறு நல மருத்துவமனை கட்டிடத்தினை
மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்
துவக்கி வைத்தல்



மருத்துவ அலுவலர்கள் 5 பணியிடங்களை நிரப்பிட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் பெறப்பட்டு நேர் காணல் நடைபெற்று உரிய நபர்கள் வராததால்,மீள பெயர்பட்டியல் அனுப்பி வைக்க சென்னை வேலை வாய்ப்பு அலுவலகத்தினை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார செவிலியர் பணியிடம் நிரப்பிட சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் கோரப்பட்டது. உரிய நபர்கள் இல்லாததால் உள்ளூர் செய்திதாளில் விளம்பரம் செய்து பெறப்பட்ட மனுக்கள் தொடர்பாக உரிய கருத்துரை வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி சேலம் மாநகராட்சியில் காலியாகவுள்ள பணியிடங்களில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வாரிசு வேலை தகுதியான 100 பேருக்கு வழங்கிட, அதற்கான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிநியமன உத்திரவு வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# பொது சுகாதாரம்

## மருத்துவ மையங்களின் சேவைகள்

சேலம் மாநகராட்சி பகுதிகளில் வாழும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குடும்ப நலசேவைகளுக்காக நகர்நல மையங்கள் 7 எண்ணிக்கையிலும், கர்ப்பிணிகள் பரிசோதனைசெய்தல், பிரசவம் பார்த்தல் மற்றும் பச்சிளம் குழுந்தைகள் பராமரித்தல் போன்ற சேவைகளுக்காக தாய் சேய் நல மையங்கள் 15 எண்ணிக்கையிலும், புற நோயாளிகள் சிகிச்சைக்காக அலோபதி மருந்தகங்கள் மற்றும் இந்திய முறை மருந்தகங்கள் 9 எண்ணிக்கையிலும் சிறப்பாக செயல் படுத்தப்பட்டு வருகிறது.

2012 – 13ம் ஆண்டில் மாநகராட்சி தாய் சேய் நல மையங்கள் மூலமாக 1621 பிரசவங்களும் மற்றும் 2 இலட்சத்து 21 ஆயிரத்து 452 புறநோயாளிகளுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஐந்து நோய்களுக்கான தடுப்பு மருந்து, முறையே தொண்டைஅடைப்பான், கக்குவான், இரணஜன்னி, மஞ்சள்காமாலை மற்றும் நிமோனியா போன்ற நோய்களுக்கு 6500 குழந்தைகளுக்கு காசநோய் தடுப்புமருந்தும், 8000 குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்புமருந்தும் வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப நல கருத்தடை முறைகளான காப்பர் 'டி' சாதனம் 2069 தாய்மார்களுக்கு பொருத்தப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலர்கள் மற்றும் நகர சுகாதார செவிலியர்களுக்கு இதற்கான சிறப்பு பயிற்சி குடும்பநல துறை மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 2012–2013–ல் புறநோயாளிகள் மற்றும் கர்ப்பிணிகள் பிரசவங்களுக்காக ரூ.15.00 இலட்சத்திற்கான மருந்துகள் கொள்முதல் செய்து, மாநகராட்சி மருத்துவமனைகளுக்கு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கருவுற்ற தாய்மார்கள் மகப்பேறு காலத்தில் ஊட்டச்சத்தான உணவு உண்ணவும், வருவாய் இழப்பை ஈடுகட்டவும், முதல் இரண்டு கர்ப்பத்திற்கு ரூ. 12000/– நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சியில் 2012–2013ஆம் ஆண்டில் மட்டும் 7044 தாய்மார்களுக்கு ரூ. 2 கோடியே 81 இலட்சத்து 76 ஆயிரம் மூன்று தவணைகளாக வழங்கப்பட்டுள்ளது.

## ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

இத்திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனை மற்றும் மாநகராட்சி அனைத்து நகர்நல மையம், தாய்சேய் நலஇல்லம் மற்றும் ஆரம்பசுகாதார நிலையங்களில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு தலா ரூ.600/– வழங்கப்படுகிறது.

வீட்டில் நடைபெறும் பிரசவங்கள் மூலம் ஏற்படும் சிக்கல்களை தடுப்பதற்கும், மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களை ஊக்குவிக்கவும், இத்திட்டத்தின் மூலம் தாய் மரணம் மற்றும் பச்சிளங்குழந்தைகளின் இறப்பை தடுப்பதற்கு நடப்பு நிதி ஆண்டில் 1521 தாய்மார்களுக்கு ரூ. 9 இலட்சத்து 12 ஆயிரத்து 600 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

2013–2014ஆம் நிதி ஆண்டில் ரூ.10.00 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டு தாய்மார்களுக்கு வழங்கப்பட உள்ளது.

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்
போலியோ சொட்டு மருந்து முகாம் துவக்கி வைத்தல்



## போலியோ நோய் ஒழிப்புத்திட்டம்

போலியோ என்கிற இளம்பிள்ளை நோயை ஒழிக்கும் பொருட்டு கடந்த 16 வருடமாக தீவிர போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம்கள் நடைபெற்று வருகிறது. 2013 ஆம் ஆண்டு ஜனவரி 20ம் தேதி மற்றும் பிப்ரவரி 24ம் தேதி ஆகிய தினங்களில் 5 வயதிற்குட்பட்ட 82 ஆயிரத்து 545 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக இந்தியாவில் ஒரு குழந்தை கூட போலியோ நோயினால் பாதிக்கப்படவில்லை. சேலம் மாநகராட்சி பகுதியில் கடந்த 10 வருடங்களாக ஒரு குழந்தை கூட போலியோ நோயினால் பாதிக்கப்படவில்லை என்பது பெருமைப்படக்கூடிய அம்சமாகும்.

## டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை

2012– 2013 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் தென் மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பரவிய செய்திகள் வரப்பெற்றதையடுத்து 14.05.2012ஆம் தேதியன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் கொசு தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு சிறப்பு முகாம் கோட்டம் எண் 46ல் தொடங்கப்பட்டது. மலேரியா பணியாளர்களோடு துப்புரவு பணியாளர்களை இணைத்துக் கொண்டு மாநகரில் உள்ள அனைத்து கோட்டங்களில் உள்ள தெருக்கள் மற்றும் வீடுகளில் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஈடிஸ் கொசு மற்றும் புழுக்களை ஒழிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

19.11.2012 முதல் 8.12.2012 வரை மருத்துவ அலுவலர்கள் தலைமையில் செவிலியர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுக்கள் உறுப்பினர்களை கொண்டு ஒன்பது சிறப்பு குழுக்கள் அமைத்து, வீடு வீடாக சென்று கொசுக்கள் முட்டையிடும் மழைநீர் தேங்கும் டயர்கள், உடைந்த பிளாஸ்டிக்பொருட்கள், தேங்காய்மட்டைகள் ஆகியவற்றை அப்புறப்படுத்தப்பட்டது.

மேலும் கொசுப்புழுக்களை அழிக்கும் அபேட் ( டெமிபாஸ் 50 ) என்ற மருந்தை அனைத்து வீடுகளிலும் உள்ள தண்ணீர் தொட்டிகளில் ஊற்றுவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மருத்துவம் சார்ந்த செவிலியர், மாணவ மற்றும் மாணவியர்களைக் கொண்டு விழிப்புணர்வு பணியும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் பகல் நேரங்களில் கொசுக்களை ஒழிக்க புகைத் தெளிப்பான் பணியை மேற்கொள்ள புதியதாக 20 கைத்தெளிப்பான் இயந்திரங்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## தெருநாய்கள் ஒழிப்புத் திட்டம்

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் சுற்றித்திரியும் ஆதரவற்ற தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், ரேபீஸ் வெறிநாய் கடிநோய் பரவுவதைத் தடுக்கவும், கால்நடை பராமரிப்புத்துறை, அரசுசாரா பிராணிகள் நல நிறுவனங்கள், பிராணிகளுக்கான தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் மாநகராட்சியில் அறுவை சிகிச்சை அரங்கங்கள் ஏற்படுத்தி, தெருநாய்களுக்கு இனப்பெருக்க அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ளப்படும். 2013–2014 ஆம் நிதியாண்டில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கிடு செய்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

## பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் பணி


சேலம் மாநகராட்சியில் பிறப்பு, இறப்பு சான்று வழங்கும் மையங்கள் மூலமாக 2012ஆம் ஆண்டில் 27,189 பிறப்பு மற்றும் 7,507 இறப்பு ஆகிய நிகழ்வுகள் அனைத்திற்கும் பதிவுகள் செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கொசு தடுப்பு மற்றும்
கொசு ஒழிப்பு சிறப்பு முகாம் துவக்கி வைத்தல்



40 மைக்ரான்களுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் ஒழிப்பு ஆய்வுப் பணி மேற்கொள்ளுதல்





தற்போது பொது மக்களிடமிருந்து பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கக் கோரி வரப்பெறும் மனுக்களுக்கு ( Copy Application ) அன்றைய தினமே பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் அனுப்பப்பட்டு வருகிறது. பெயர் பதிவு குறித்து பெறப்படும் மனுக்களுக்கு மூன்று நாட்களில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

## ஈமச்சடங்கு மான்யம்

2012–2013ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் வகுப்பினரில் இறந்தவர்களின் ஈமச்சடங்கிற்காக தலா ரூ.2500/– வீதம் 367 குடும்பத்திற்கு உதவி தொகையாக ரூ.9,17,500/– வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வரும் நிதியாண்டிலும் தொடரும்.

## பிளாஸ்டிக் ஒழிப்பு

40 மைக்ரான்அளவிற்குட்பட்ட பிளாஸ்டிக் பயன்பாட்டினை ஒழிக்க மைக்ரோமீட்டர்கள் துப்புரவு ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டு, நேராய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு விதியினை மீறும் விற்பனையாளர்களிடம் இருந்து அபராதத் தொகை வசூலிக்கப்படுகிறது. பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி
பொருள்களின் விற்பனை மற்றும் கண்காட்சியினை துவக்கி வைத்தல்



# சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டம்

## 2012 – 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மான்யம் மற்றும் கடன் தொகை விவரம்

### 1. நகர்ப்புற மக்களின் தனி நபர் கடன்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 25% |
|---|---|---|
| 494 | ரூ.1,94,12,700/– | ரூ.48,53,175/– |

### 2. நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சி திட்டம்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை |
|---|---|
| 1113 | ரூ.1,14,90,973/– |

### 3. நகர்ப்புற பெண்கள் சுயதொழில் திட்டம்

| குழுக்களின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 35% |
|---|---|---|
| 60 | ரூ.1,04,00,900/– | ரூ.36,40,315/– |

### 4. நகர்ப்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

| குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | சுழல் நிதித் தொகை |
|---|---|---|
| 121 | 1,700 | ரூ.12,13,438/– |

# சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டம்

## 2013 – 2014 ஆம் ஆண்டில் உத்தேச ஒதுக்கீடு விவரம்

### 1. நகர்ப்புற மக்களின் தனி நபர் கடன்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 25% |
|---|---|---|
| 1100 | ரூ.3,21,26,280/– | ரூ.80,31,570/– |

### 2. நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சி திட்டம்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை |
|---|---|
| 1250 | ரூ.1,25,00,000/– |

### 3. நகர்ப்புற பெண்கள் சுயதொழில் திட்டம்

| குழுக்களின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 35% |
|---|---|---|
| 120 | ரூ.1,72,10,485/– | ரூ.60,23,670/– |

### 4. நகர்ப்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

| குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | சுழல் நிதித் தொகை |
|---|---|---|
| 200 | 2,000 | ரூ.20,00,000/– |

கோட்டம் எண் 50ல் மணியனூர் சந்தைப் பகுதியில் கல்வி நிதியிலிருந்து ஒருங்கிணைந்த புதிய பள்ளி வளாக கட்டுமானப் பணிகளை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தல்





# கல்வி நிதி

2012–2013க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ.1032.77 இலட்சங்கள்
2013–2014க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ.1068.62 இலட்சங்கள்

2012–2013ஆம் நிதியாண்டில் மாநகராட்சி பள்ளிகளின் கூடுதல் கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு ரூ.422.35 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்டுள்ள பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சூரமங்கலம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட கந்தம்பட்டி, போடிநாய்க்கன்பட்டி , பழைய சூரமங்கலம் மாநகராட்சி பள்ளிகள்.

அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட கோட்டை (ஆண்கள்), சின்னகொல்லப்பட்டி, சகாதேவபுரம் (பெண்கள்) மாநகராட்சி பள்ளிகள்.

அம்மாப்பேட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வையாபுரிதெரு, பெரியகிணறுதெரு, புதுத்தெரு, புத்துமாரியம்மன்கோவில்தெரு, எருமாபாளையம் மாநகராட்சி பள்ளிகள்.

கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பிள்ளையார் கோயில் தெரு, குகை (பெண்கள்), மணியனூார் மாநகராட்சி பள்ளிகள்.

மொத்தம் 20 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 4 பணிகள் முடிக்கப்பட்டது. 7 பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள 9 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் ஓய்வூதியதாரரின் குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மருத்துவ நலநிதித் திட்டத்தில் ஓய்வூதியதாரர்களுக்கு காசோலை வழங்குதல்



2013–2014ஆம் நிதியாண்டிலும் மாநகராட்சி பள்ளிகளின் மேம்பாட்டிற்கு கூடுதல் கட்டிடங்கள், குழந்தைகள் சத்துணவு மையங்கள் பராமரிப்பு பணிகள் மற்றும் சமையலறைகள் புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி ரூ.952.66 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சத்துணவு மையங்கள்

**புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின்** கீழ், சேலம் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 62 சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்களில் தினந்தோறும் 8,937 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். சத்துணவு மையங்களின் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கணக்குப்பிரிவு

## ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன்

சேலம் மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பிரதி மாதம் வழங்கப்பட்டு வருகிறது.

2012 – 2013ஆம் வருடத்தில் சேலம் மாநகராட்சியின் மைய அலுவலகம் மற்றும் நான்கு வார்டு அலுவலகங்களில் பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற மற்றும் பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் இறந்த தேதியினை அடிப்படையாகக் கொண்டு, ஓய்வூதியதாரர்களுக்கும், வாரிசுதாரர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்து அதற்குரிய தொகை , பணிக்கொடை, தொகுப்பு தொகை ஆகிய ஓய்வூதிய பணப்பயன்கள் தொகை ரூ. 1,82,05,953/– வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியரின் குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மருத்துவ நலநிதி திட்டத்தின் கீழ் 33 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.9,79,263/– தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## கட்டுமானத் தொழிலாளர் நல நிதி

2012 – 2013ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சியில் மேற்கொள்ளும் பணிகள் தொடர்பாக ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கட்டுமானத் தொழிலாளர் நலநிதி தொகை ஆகியவை ரூ.85.04 இலட்சங்கள் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

## புதிய திட்டங்கள்

- சேலம் மாநகரத்தில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து போக்குவரத்து நெரிசல் அதிகமாகிவிட்டபடியால், சேலம் மாநகரில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தைக் கருதி **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் நமது சேலம் மாநகரத்தில் 5ரோடு சந்திப்பு பகுதியிலும், ஏ.வி.ஆர் ரவுண்டானா பகுதியிலும், குரங்குசாவடி பகுதியிலும் மூன்று புதிய மேம்பாலங்கள் அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு இந்த மாமன்றம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. இதற்கான முயற்சியை மேற்கொண்ட **மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

- எருமாபாளையம் உரக்கிடங்கு மணியனூர் மற்றும் வீராணம் பகுதியில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டுள்ள சுமார் 2.50 இலட்சம் மெட்ரிக்டன் குப்பைகள் தற்போது 30 அடி உயரத்திற்கு மேல் உள்ளது. இதனை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயோமைனிங் முறையில் அல்லது நவீன அறிவியல் முறையில் மூடுதளம் அமைத்து, அதன் மேல் புல் தரைகள் அமைத்து சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைக்கப்படும்.

- சேலத்தின் மையப்பகுதியில் உள்ள வ.உ.சி மார்க்கெட்டினை புதிய வடிவில் நவீன மார்க்கெட்டாக மாற்றப்படும்.

- பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டிடங்கள் மிக பழமையானதாகவும் பழுதடைந்து உள்ளதாலும் அதனை அப்புறப்படுத்தி அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன முறையிலான நகர பேருந்து நிலையம் கட்டப்படும்.

❖ பழைய பேருந்து நிலைய கழிப்பிடங்களில் சேரும் மனித கழிவுகள் மற்றும் உணவு விடுதிகளில் சேரும் கழிவுகளில் இருந்து புதிய தொழில் நுட்ப உதவியுடன் கழிப்பிடத்திற்கு தேவையான மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

❖ மாநகராட்சி பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களை ஆய்வு செய்து அதில் மாநகராட்சிக்கு வருமானம் ஈட்டித்தரக்கூடிய இடங்களில் கடைகள், வணிக வளாகங்கள் மற்றும் பல்நோக்கு சமுதாய கூடம் கட்டப்படும்.

❖ மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள், பள்ளிகள் மற்றும் திருமணிமுத்தாற்றின் கரைகளில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரித்து அதன் மூலம் மாநகராட்சி கட்டிடங்கள் மற்றும் தெருவிளக்குகள் எரிய வைத்து மின்சாரத்தின் தேவையை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

❖ முதல் அக்ரஹாரம் மற்றும் 2ம் அக்ரஹாரம் பகுதிகளில் வணிகம் மற்றும் கடைகள் அதிகமாகவும், நெருக்கமாகவும் இருப்பதாலும் தினசரி 50,000 முதல் 1,00,000 வரை மக்கள் வந்து செல்லும் இடம் என்பதாலும் போக்குவரத்து வாகன நிறுத்த இட வசதியின்றி சாலை ஓரங்களில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு தனியார் பங்களிப்பில் புதிய பேருந்து நிலையம் மற்றும் திருமணி முத்தாற்றின் குறுக்கே நவீன முறையிலான அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் அமைக்கப்படும்.

❖ மாநகராட்சி பராமரிப்பில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் தேவையான இருக்கை வசதிகள், கணினி வசதிகள், ஆய்வகம் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- பொன்னம்மாபேட்டை ரயில்வே கிராஸிங் பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வண்ணம் ரயில்வே துறை மற்றும் நெடுஞ்சாலை துறையிடம் கலந்து போக்குவரத்து மேம்பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- பசுமை திட்டத்தினை ஊக்குவிக்கும் வண்ணம் இந்த நிதியாண்டில் பள்ளிகள், கல்லூரிகள் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மற்றும் சாலையோரங்களில் 50,000 எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் நடப்படும்.

- மின்சாரத்தை சேமிக்கும் வண்ணம் மாநகராட்சியில் உள்ள அனைத்து சாலைகளில் உள்ள தெருவிளக்குகளையும் ஆய்வு செய்து அந்த இடத்திற்கு போதிய அளவு வெளிச்சம் தரக்கூடிய ஒளிஉமிழ் இருமுனையும் விளக்குகள் 16840 எண்ணிக்கையிலான மின்சார சேமிப்பு தெருவிளக்குகள் அமைக்கப்படும்.

- மாநகராட்சியில் புதியதாக கட்டியுள்ள கிச்சிப்பாளையம், செவ்வாய்ப்பேட்டை, அண்ணா மருத்துவமனை, கருங்கல்பட்டி NGGO காலனி மற்றும் அனைத்து தாய் சேய் நல மையங்களுக்கும் கட்டில், மெத்தைகள், போர்வைகள், எடை அளவிடும்கருவி, பேபிவார்மர் போன்றவை வழங்கப்படும்

- இரத்தத்தில் சர்க்கரைஅளவு, ஹீமோகுளோபின் போன்றவை பரிசோதனை செய்வதற்கான ஆய்வகம் மாநகராட்சி மருத்துவமனையில் அமைக்கப்படும்.

- பொன்னம்மாபேட்டை, அரிசிப்பாளையம், அம்மாபேட்டை, தாதகாப்பட்டி, அஸ்தம்பட்டி, கோட்டை, குகை , பள்ளப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள மாநகராட்சி மருத்துவமனைகளை ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

- குமாரசாமிப்பட்டி தாய்சேய் நலமையம், தாதகாப்பட்டி தாய்சேய் நலமையம் அல்லது அம்மாபேட்டை அண்ணா மருத்துவமனை ஆகியவற்றில் புதியதாக அறுவை சிகிச்சை அரங்கு மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் ஓய்வு அறைகள் ரூ.2.00 கோடி செலவில் அமைக்கப்படும்.

- நோய் கண்காணிப்பு, நோய் தடுப்பு மற்றும் அவசர கால பிரசவம் மற்றும் பிரசவத்திற்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை மருத்துவ குழு மற்றும் மருத்துவர்கள் பயன்பாட்டிற்கு நடமாடும் மருத்துவ வாகனம் ரூ.40.00 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

- துப்புரவு பணியாளர்களுக்கு மருத்துவ முகாம்கள் நடத்தி இரத்தத்தில்சர்க்கரை, கொழுப்பு, ஹீமோகுளோபின், இ.சி.ஜி மற்றும் எக்ஸ்ரே பரிசோதனைகள் மேற்கொண்டு சிகிச்சைக்கான மருந்துகள் வழங்கப்படும்.

- **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் மகளிர் முன்னேற்றத்திற்கு என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துகின்ற நல்ல நேரத்தில் மகளிர் தினத்தினை முன்னிட்டு மகளிர் சுகாதாரத்தினை பேணுகின்ற வகையில் மகளிர் மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளில் சானிட்டரி நாப்கின்ஸ்கள் எரியூட்டும் நவீன இயந்திரங்கள் 14 எண்ணிக்கைகள் ரூ.10.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

- சேலம் மாநகராட்சியில் உள்ள அனைத்து பேருந்து நிழற் கூடங்களிலும் ஆண்கள், பெண்கள் பயன்படுத்தும் வகையில் நவீன முறையிலான கழிப்பிட வசதி ( Pre Fabricated Toilet ) அமைத்து தரப்படும்.

- சேலம் மாநகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வரும் ஆனந்தா பாலம், குண்டு போடும் பாலம் ஆகியவற்றிக்கு அனுகு சாலை ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

❖ தேசிய மீன் வளர்ச்சிக் கழகம் ஹைதராபாத் அவர்கள் நிதி உதவியுடன் குகை பகுதியில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் நவீன மீன்அங்காடி அமைக்கப்படும்.

❖ சேலம் மாநகர மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மண்டலத்திற்கு ஒன்று வீதம் நான்கு மீன் அங்காடிகள் அமைக்கப்படும்.

❖ மின்சார சேமிப்பினை செயல்படுத்தும் விதமாக மாநகரில் உள்ள உயர்மின் கோபுர விளக்குகளை ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் நவீன பிளாஸ்மா விளக்குகளாக அமைக்கப்படும்.

❖ சீலநாய்க்கன்பட்டி பகுதியில் பூ மார்க்கெட் அமைக்கப்படும்.

❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி மேம்பாட்டு திட்டம் (IUDM) 2013–2014 ஆம் ஆண்டிற்கு கீழ்கண்ட விவரப்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணி 8 எண்ணிக்கையில் ரூ.747.50 இலட்சம் மதிப்பீட்டிலும், குடிநீர் பணி 1 எண்ணிக்கை ரூ.376.00 இலட்சம் மதிப்பீட்டிலும், சாலை மேம்பாட்டு பணிகள் 51.120 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ. 3124.60 இலட்சம் மதிப்பீட்டிலும், மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 6.914 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ.362.80 இலட்சங்கள் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.4608.90 இலட்சங்களில் திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை – ஆத்தூர் மார்க்கம் மற்றும் சீலநாய்க்கன்பட்டி – நாமக்கல் மார்க்கம் ஆகிய எல்லைகளில் வரும் பேருந்துகளை பொதுமக்களின் நலன்கருதி அந்தந்த எல்லையில் நிறுத்த புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

❖ நரசோதிப்பட்டி பகுதியில் உள்ள வாரச்சந்தையினை தினசரி மார்க்கெட்டாக மாற்றப்படும்.

❖ மாநகராட்சி பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாற்றுத்திறனாளிகளில், அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து ஆண்டுதோறும் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொற்கால நல்லாட்சியில் சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. கே.பி.முனுசாமி** அவர்களுக்கும், **மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களுக்கும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியினை வழங்கி சிறப்பித்து வரும் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் தெற்கு தொகுதி, சேலம் மேற்கு தொகுதி மற்றும் சேலம் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் சேலம் மாநகராட்சியின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்குத் துணையாக இருக்கும் வணக்கத்திற்குரிய துணைமேயர் அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையாளருக்கும், மண்டல குழுத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர் மற்றும் மாநகராட்சியின் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் கண்காணிப்புப் பொறியாளர் (திட்டம்), செயற்பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்), மாநகர நல அலுவலர் (பொறுப்பு), உதவி ஆணையர்கள், உதவிசெயற்பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும், மாநகராட்சிக்கு உதவியாக உள்ள மாநகர காவல்துறை ஆணையாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துப் பிரிவு காவல் துறையினருக்கும், மேலும் பிற துறைகளின் அலுவலர்களுக்கும், செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சியினர் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த நிதிநிலை அறிக்கையை தயாரிக்க உறுதுணையாக இருந்த வரி மற்றும் நிதிநிலைக் குழுத்தலைவர் திரு. ஜெ.மாணிக்கம் அவர்களுக்கும், குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**" எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்**
**இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் "**

என்ற உயர்ந்த சிந்தனையோடு நல்லாட்சி நடத்திவரும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் எண்ணத்திற்கேற்ப சேலம் மாநகர மக்களுக்கு பல்வேறு நலத்திட்டப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து, சேலம் மாநகரத்தை எல்லாவகையிலும் சிறப்பான, செழிப்பான மாநகரமாக உருவாக்குவோம் என உறுதி அளித்து, இதற்கு உங்கள் அனைவரின் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டு, அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சேலம் மாநகர மக்களுக்கு சேவை செய்ய எனக்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கும், சேலம் மாநகர மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது பணிவான வணக்கத்தினையும், நன்றியையும் சமர்ப்பித்து இந்த நிதிநிலை அறிக்கை மீதான உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

சேலம் – 1.

25.03.2013

**எஸ். சவுண்டப்பன்**
வணக்கத்திற்குரிய மேயர்
சேலம் மாநகராட்சி.



திரு. எஸ். சவுண்டப்பன்

வணக்கத்திற்குரிய மேயர்



திரு. எம். நடேசன்

வணக்கத்திற்குரிய துணைமேயர்



திரு. எம். அசோகன், எம்.எஸ்ஸி.,

ஆணையாளர்



ரு. தா. தியாகராஜன்

வார்டுகுழு தலைவர்

மண்டலம் - 1



திரு. கே. மாதேஸ்வரன்

வார்டுகுழு தலைவர்

மண்டலம் - 2



திரு. வி. ஜெயபிரகாஷ்

வார்டுகுழு தலைவர்

மண்டலம் - 3



திரு. எம். சண்முகம்

வார்டுகுழு தலைவர்

மண்டலம் - 4



திரு. ஜெ. மாணிக்கம்
வரி மற்றும் நிதி நிலைக்குழு தலைவர்



திரு. எ. பிரகாஷ்
கணக்கு நிலைக்குழு தலைவர்



திரு. அ. மாரியப்பன்
பணிகள் நிலைக்குழு தலைவர்



திரு. ஜெ. செந்தில்குமார்
கல்வி நிலைக்குழு தலைவர்



திரு. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தலைவர்



திருமதி. ந. ஜமுனாராணி
சுகாதார நிலைக்குழு தலைவர்



திரு. மா. பாலு
நியமனக்குழு உறுப்பினர்

## மாமன்ற உறுப்பினர்கள்



திரு. சி. அசோக்குமார்
கோட்டம் எண் : 2



திருமதி. மு. புவனேஸ்வரி
கோட்டம் எண் : 4



திருமதி. அ. மனோன்மணி
கோட்டம் எண் : 5

# மாமன்ற உறுப்பினர்கள்



திரு. எஸ். மணி
கோட்டம் எண் : 6



திரு. கொ.ரா.சீ. சரவணன்
கோட்டம் எண் : 7



திருமதி. க. பாமா
கோட்டம் எண் : 8



திரு. எம்.ஆர்.ஜெயகுமார்
கோட்டம் எண் : 9



திரு. வெ. தெய்வலிங்கம்
கோட்டம் எண் : 10



திரு. என்.பீ. முருகானந்தம்
கோட்டம் எண் : 11



திருமதி. மா. மதலேனா
கோட்டம் எண் : 12



திரு. அ. இராமசாமி
கோட்டம் எண் : 13



திரு. கே. முருகன்
கோட்டம் எண் : 15



திரு. எம். ராஜேந்திரன்
கோட்டம் எண் : 17



திரு. பெ. முருகேசன்
கோட்டம் எண் : 18



திருமதி. சி. அனுராதா
கோட்டம் எண் : 19



திரு. பா. ரவீந்திரன்
கோட்டம் எண் : 20



திரு. அ. மாதையன்
கோட்டம் எண் : 21



திருமதி. ஜெ. பொன்னி
கோட்டம் எண் : 22



திருமதி. தே. இந்திரா
கோட்டம் எண் : 23

# மாமன்ற உறுப்பினர்கள்



திரு. ஆ. கிருபாகரன்
கோட்டம் எண் : 24



திருமதி. வெ. சசிகலா
கோட்டம் எண் : 27



திரு. ந.பி. மார்கபந்து
கோட்டம் எண் : 28



திரு. பா. ஆதிமாதவன்
கோட்டம் எண் : 30



திருமதி. ஏ. ஷாயேஙஜம்
கோட்டம் எண் : 31



திருமதி. உ. சித்ரா
கோட்டம் எண் : 32



திரு. எஸ். கபீர்
கோட்டம் எண் : 33



திருமதி. எஸ். கோகிலவாணி
கோட்டம் எண் : 35



திரு. ஏ. தாமரைச்செல்வன்
கோட்டம் எண் : 36



திரு. கே. சுப்ரமணி
கோட்டம் எண் : 37



திரு. கே. மனோகரன்
கோட்டம் எண் : 39



திரு. கே. தாஜிதீன்
கோட்டம் எண் : 40



திருமதி. எ. கீதா
கோட்டம் எண் : 41



திருமதி. ஜி. சரளா
கோட்டம் எண் : 42



திருமதி. பி. மேகலா
கோட்டம் எண் : 44



திருமதி. ஆர். செல்வி
கோட்டம் எண் : 45

# மாமன்ற உறுப்பினர்கள்



திரு. ஈ. பாலசுப்ரமணியன்
கோட்டம் எண் : 46



திரு. மா. கர்ணன்
கோட்டம் எண் : 47



திருமதி. ஆர். விஜயா
கோட்டம் எண் : 48



திரு. க. முத்து
கோட்டம் எண் : 49



திரு. எம். பரமசிவம்
கோட்டம் எண் : 51



திரு. என். மீனாட்சிசுந்தரம்
கோட்டம் எண் : 52



திருமதி. ஆர்.எல்.குலாப்ஜான் சாகுல்
கோட்டம் எண் : 53



திரு. எஸ்.பி. சரவணன்
கோட்டம் எண் : 54



திருமதி. ஜி. தங்கம்மாள்
கோட்டம் எண் : 55



திரு. எஸ். நாகேஸ்வரன்
கோட்டம் எண் : 56



திருமதி. எம். மல்லிகா
கோட்டம் எண் : 57




திரு. பி. முருகன்
கோட்டம் எண் : 59



திருமதி. எஸ். சாந்தி
கோட்டம் எண் : 60

# சேலம் மாநகராட்சி வரைபடம்




- சூரமங்கலம் மண்டல பகுதி
- அஸ்தம்பட்டி மண்டல பகுதி
- அம்மாபேட்டை மண்டல பகுதி
- கொண்டலாம்பட்டி மண்டல பகுதி

சேலம் மாநகராட்சி கூட்ட அரங்கில் சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்ப்பது தொடர்பாக வர்த்தக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம்







மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்
திரு. கே.பி.முனுசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்
திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாநகராட்சி தனிக்குடிநீர்த் திட்டப்பணிகளை ஆய்வு செய்தல்
உடன்அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், வணக்கத்திற்குரிய மேயர்,
சட்டமன்ற உறப்பினர்கள் மற்றும் துணை மேயர் ஆகியோர் ஆய்வு செய்தல்.

